செ.வெ. எண் :32/பிப்ரவரி நாள் : 17.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**சட்டமன்ற தேர்தல்-2016 - முதற்கட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கும் பணியினை**

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்**

இராமநாதபுரம், தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலுள்ள சேமிப்பு கிட்டங்கியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள, சட்டமன்ற தேர்தல்-2016, இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கும் முதற்கட்ட பணியினை இன்று (17.02.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளான 209. பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 301 வாக்குச்சாவடி மையங்களும், 210. திருவாடானை சட்டமன்ற தொகுதிகளில் 321 வாக்குச்சாவடி மையங்களும் 211. இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் 321 வாக்குச்சாவடி மையங்களும் 212. முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 364 வாக்குச்சாவடி மையங்களும் என மொத்தம் 1,307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்குச்சாவடி மையங்களுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு கருவிகள் பீகார் மாநிலத்திலிருந்து 1,674 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 2,500 கட்டுப்பாட்டு கருவிகளும் கொண்டுவரப்பட்டு, இராமநாதபுரத்திலுள்ள தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக் கூட சேமிப்பு கிட்டங்கியில் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளான இராமநாதபுரம், முதுகுளத்தூர், பரமக்குடி மற்றும் திருவாடானை ஆகிய தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு கருவிகள் பெல் நிறுவன பொறியாளர்கள் மேற்பார்வையில் சரிபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை இன்று (17.02.2016) முதல் 24.02.2016 வரை முதனிலை பரிசோதனை (First Level Checking) செய்திடவும், முதனிலை பரிசோதனையின் போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதி ஒருவரை அனுமதிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு கருவிகளை சரிபார்க்கும் பணியினை மேற்கொண்டு விரைந்து முடித்து சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலர்களிடம் வழங்கிட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சித்தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.. அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின் போது, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.ராம்பிரதீபன், தேர்தல் வட்டாட்சியர் திரு.சுகுமாறன் மற்றும் தேர்தல் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**